Public Health England

NHS

# BCG
# காசநோய்த் தடுப்பூசி மருந்தும்
## உங்கள் குழந்தையும்



immunisation

உங்கள் பிள்ளையைக் காப்பாற்ற அதிபாதுகாப்பான வழி

**இந்தத் துண்டுப்பிரசுரம், உங்கள் குழந்தையைக் காசநோயிலிருந்து (TB) காப்பாற்றுவதற்குத் தரப்படும் BCG (Bacillus Calmette-Guerin) தடுப்பூசி மருந்து பற்றியதாகும்.**

## BCG தடுப்பூசி மருந்து என்றால் என்ன?

BCG தடுப்பூசி மருந்து காசநோயை உண்டாக்கும் பக்தீரியாவின் (நுண்ணுயிரி) பலவீனப்படுத்தப்பட்ட வகை ஒன்றைக் கொண்டுள்ளது. அது பலவீனப்படுத்தப்பட்டிருப்பதால் உண்மையில் காசநோயை ஏற்படுத்தாது. மாறாக, உங்கள் குழந்தையின் காசநோய் தடுப்புச் சக்தியை வளர்த்து என்றாவது அவனுக்கோ அவளுக்கோ நோயுடன் தொடர்பு, ஏற்படுமானால், அதனை எதிர்க்க உதவுகிறது. மூளைக்காய்ச்சல் போன்ற அபூர்வ, கடுமையான காசநோய் வகைகளிலிருந்து குழந்தைகளையும் இளம் பிள்ளைகளையும் காப்பாற்றுவதில் BCG தடுப்பூசி மருந்து குறிப்பாகப் பயன் தருகிறது.

## காசநோய் என்றால் என்ன?

காசநோய் ஒரு பாக்தீரியா நுண்ணுயிரித் தொற்று ஆகும். இது வழமையாக சுவாசப்பைகளைப் பாதிக்கிறது, ஆயினும் உடலின் எந்தப் பாகத்தையும் இது பாதிக்கக்கூடியது. காசநோய் நுண்ணுயிரித் தொற்று ஏற்பட்டால் அது காசநோயாக வளராமலும் போகலாம். உடலில் காசநோய் மெதுவாக வளர்ச்சி அடையும். அதற்கான அறிகுறிகள் தோன்ற பல மாதங்கள் செல்லும். காசநோய்த் தொற்று ஏற்பட்டவர்களில் பெரும்பாலானவர்களுக்கு காசநோயே ஏற்படுவதில்லை. அவ்வாறானவர்களில் காசநோய்த் தொற்று அவர்களது வாழ்நாள் முழுவதும் செயலற்று இருக்கும். ஏனையோரில் (உதாரணமாக நோய் எதிர்ப்புச் சக்திக் குறைபாடு உள்ளோர்) நுண்ணுயிரிச் செயல்பாடு தீவிரமாகி காசநோய் ஏற்படலாம். இந்த நாட்டில் பெரும்பாலானவர்கள், சிகிச்சைக்குப்பின் முற்றிலும் குணம் அடைகிறார்கள். ஆயினும் இதற்கு பல மாதங்கள் செல்லும்.

## காசநோய்க்குரிய அறிகுறிகள் என்ன?

காசநோய் உடலின் எப்பாகத்தையும் பாதிக்கலாம். அறிகுறிகள் வேறுபடும். ஒரு குழந்தையில் தோன்றும் அறிகுறிகள் வளர்ந்த ஒருவரது அறிகுறிகளைவிட வித்தியாசமாக இருக்கலாம். காசநோய் பரவக்கூடியதாக இருப்பதால், வேறு ஒருவர் இதனால் பீடிக்கப்பட்டிருப்பதை நீங்கள் கண்டுபிடிக்கக் கூடியதாய் இருப்பது முக்கியம்.

கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்று உங்களுக்கோ, உங்கள் குழந்தைக்கோ, உங்கள் குடும்பத்தில் வேறு எவருக்கோ, நண்பர் ஒருவருக்கோ ஏற்பட்டால், நீங்கள் மருத்துவர் ஒருவருடன் தொடர்பு கொள்ளவேண்டும்:

- மூன்று வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இடைவிடா இருமல்
- காய்ச்சல்
- வியர்த்தல், விசேடமாக இரவில்
- காரணமின்றி உடல் எடை குறைதல்
- வழக்கத்துக்கு மாறான, பொதுவான களைப்புணர்வு மற்றும் சுகவீனம்
- இருமும்போது இரத்தம் வருதல்

## எவ்வாறு காசநோய் தொற்றுகிறது?

ஏற்கனவே தொற்றுக்கு உள்ளாகிய சுவாசப்பைகள் அல்லது தொண்டை உள்ளவரும், இருமிக்கொண்டிருப்பவருமான ஒருவரிடம் இருந்து மட்டுமே உங்களுக்கு காசநோய் தொற்றமுடியும். அவர்கள் இருமும்போது, நுண்ணுயிரிகள் கொண்ட நுண்துளிகள் தூவப்படுகின்றன். நீங்கள் அந்த நுண்துளிகளைச் சுவாசித்தால் தொற்று உங்களுக்கும் ஏற்படலாம். தொற்றுள்ள ஆளொருவருடன் கொள்ளும் நெருங்கிய, நீண்ட தொடர்பே - உதாரணமாக ஒரே வீட்டில் வசித்தல்- தொற்று ஏற்படும் ஆபத்தை உண்டாக்கும்.

## காசநோய் எவ்வளவு தூரம் பரவியுள்ளது?

ஐக்கிய இராஜ்யத்தில் 1950-களில் ஒவ்வோராண்டும் 50,000 பேர் புதிதாகத் தொற்றுக்கு உள்ளாகினர். இன்று, இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 6,000-க்கும் சற்றுக் கூடுதலாகப், புதிய தொற்று நிகழ்வுகளாக வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆகவே, உங்களுக்குத் தொற்று ஏற்படும் சாத்தியம் இல்லை எனலாம். அதே வேளை, காசநோயின் அறிகுறிகளை ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம்.

காசநோய் உலகம் முழுவதும் பரவிய ஒரு நோயாக இருப்பதால் இது விசேட முக்கியத்துவம் பெறுகிறது.

காசநோய் உயர்ந்த விகிதங்களில் காணப்படும் நாடுகளில் வசித்துள்ள அல்லது வேலை செய்துள்ள ஆட்கள் நோய்வாய்ப்படும் ஆபத்து கூடுதலாக இருக்கும். இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், தமது சமூகத்தில் உள்ள தொற்றுக்குள்ளான உறுப்பினர்களுடன், ஐக்கிய இராஜ்யத்திலேயோ, சொந்த நாட்டிலேயோ, நெருங்கிய தொடர்பு கொள்ளும் சாத்தியமும் கூடுதலாக இருக்கும்.

## ஏன் என் குழந்தைக்கு BCG ஏற்றுமாறு யோசனை கூறப்படுகிறது?

ஐக்கிய இராஜ்யத்தில், வேறு பல நாடுகளைப் போலவே, காசநோய் உள்ள ஆளொருவருடன் தொடர்பு ஏற்படும் சாத்தியம் உள்ள குழந்தைகளுக்கு BCG ஏற்ற யோசனை கூறப்படுகிறது. காசநோய் உயர்ந்த விகிதங்களில் காணப்படும் பகுதி ஒன்றில் வசிக்கும் குழந்தைகள் அல்லது காசநோய் உயர்ந்த விகிதங்களில் காணப்படும் நாடு ஒன்றில் இருந்து வந்த பெற்றோருடன் அல்லது தாத்தா பாட்டியுடன் வசிக்கும் குழந்தைகள் இவர்களில் உள்ளடங்குவர். (மேலும் தகவல்களுக்கு பக்கம் 7-ஐப் பார்க்கவும்).

## என் குழந்தைக்கு எவ்வாறு தடுப்புக்காப்பு வழங்கப்படும்?

உங்கள் குழந்தையின் இடது புஜத்தின் மேற்புறத்தில் BCG நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்.

நோய்த் தடுப்பூசி மருந்து வழமையாக, உங்கள் குழந்தை பிறந்து மருத்துவ மனையில் உள்ளபோது வழங்கப்படுவதாகும். இருப்பினும் ஐந்து ஆண்டுகள் வரை எந்தச் சமயத்திலும் அது வழங்கப்படலாம்.

## பக்க விளைவுகள் எவையும் ஏற்படுமா?

தடுப்பூசி ஏற்றியவுடன் கொப்புளம் ஒன்று தோன்றும். தடுப்பூசி சரியாக ஏற்றப்பட்டுள்ளது என்பதை இது காட்டுகிறது.

தடுப்பூசி ஏற்றிய இரண்டு முதல் ஆறு வாரங்களுக்குள் சிறிய குறி ஒன்று தோன்றும். ஒரு சில நாட்களுக்கு அது சரியாக வலிக்கலாம். ஆனால் அதனை மறைக்காது விட்டால் படிப்படியாகக் குணமாகிவிடும். சிறு வடு ஒன்றை அது விட்டுச் செல்லலாம்.

இடைக்கிடையே உங்கள் குழந்தைக்குத் தடுப்பூசி ஏற்றிய இடத்தில் மேலீடான புண் ஏற்படலாம். அதிலிருந்து திரவம் வடிந்து, அதனை மறைக்க நேர்ந்தால், காய்ந்த காயம் கட்டும் துணியை – பிளாஸ்டர் அல்ல – திரவம் காயும்வரை பயன்படுத்தவும். இந்தப் புண் ஆறுவதற்கு பல மாதங்கள் எடுக்கலாம்.

உங்களுக்குக் கவலை ஏற்பட்டால், அல்லது புண்ணில் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்தால் உங்கள் மருத்துவரைப் பார்க்கவும்.



## என் குழந்தைக்கு BCG தடுப்பூசி ஆகாது என்பதற்கு காரணங்கள் எவையும் இருக்குமா?

பெரும்பாலான இதர தடுப்புக்காப்புகள் போலவே, கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் தடுப்பூசியை ஏற்றாதுவிடலாம், அல்லது ஏற்றுவதைத் தாமதிக்கவேண்டும்:

- உங்கள் குழந்தைக்கு கடும் காய்ச்சல் காய்கிறது.
- தொற்று ஒன்றினால் ஏற்படும் பொதுத் தோல் வியாதியால் உங்கள் குழந்தை அவதிப்படுகிறது. (எக்ஸிமாவாக இருந்தால், தோல் பாதிக்கப்பட்ட பகுதியைத் தவிர்த்து தடுப்பூசி ஏற்றும் இடம் தெரிவு செய்யப்படும்).

தடுப்புக்காப்பு பலவீனமாக உள்ள பிள்ளைகள் விடயத்தில், அபூர்வமாக, தடுப்பூசியில் உள்ள நுண்ணுயிரிகள் தீவிர தொற்றை ஏற்படுத்தலாம்.

உங்கள் பிள்ளையின் தடுப்புக்காப்பு பலவீனமாக இருந்தால், அல்லது அவ்வாறு இருப்பதாகச் சந்தேகம் இருந்தால், அது பற்றித் தாதிக்கோ மருத்துவருக்கோ தெரிவிப்பது மிகவும் முக்கியம். உதாரணத்துக்கு:

- பிள்ளை புற்றுநோய்க்கு அல்லது வேறு தீவிர நோய்க்கு சிகிச்சை பெறுகிறது.
- பிள்ளையின் தாய்க்கு கர்ப்ப காலத்தில் உடலின் தடுப்புக்காப்பு செயற்பாட்டைக் குறைக்கும் சிகிச்சை(immunosuppressive biological therapy) வழங்கப்பட்டது.
- தடுப்புக்காப்பு பிரச்சினைகள் கொண்ட குடும்ப வரலாறு (HIV உட்பட)



## எந்தக் குழந்தைகளுக்கு BCG தேவை

அனைத்துக் குழந்தைகளுக்கும் BCG வழங்கப்படும் பகுதி ஒன்றில் நீங்கள் வசிக்காவிட்டாலும், உங்கள் குழந்தைக்கு தடுப்பூசி தேவைப்படலாம்.

பின்வரும் கேள்விகளில் எவற்றுக்கும் '**ஆம்**' என்று பதில் அளிப்பீர்களானால், நீங்கள் உங்கள் மருத்துவர் அல்லது தாதியிடம் உங்கள் குழந்தைக்கு BCG வழங்குவது பற்றிக் கேட்கவேண்டும்.

- உங்கள் குழந்தை, குழந்தையின் தாய், தந்தை, பாட்டன் பாட்டி அல்லது உங்களுடன் வசித்துவரும் எவரும் காசநோய் உயர்ந்த விகிதத்தில் உள்ள ஒரு நாட்டில் இருந்து வந்தவர்களா?
- நீங்களும் உங்கள் குழந்தையும் இந்த நாடுகளில் ஒன்றுக்கு, வசிக்கவோ நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தங்கவோ செல்வீர்களா ?
- உங்களுடன் வசிக்கும் அல்லது உங்கள் குழந்தையுடன் அதிக நேரத்தைச் செலவிடும் ஒருவருக்கு காசநோய் உண்டா அல்லது முன்னர் இருந்ததா?



உயர்ந்த விகிதங்களில் காசநோய் நிலவும் நாடுகள், பின்வரும் இணையத் தளத்தில் உலக சுகாதார அமைப்பின் (WHO) புள்ளிவிபரங்களில் இருந்து எடுக்கப்பட்டன:

**www.gov.uk/government/publications/tuberculosis-tb-by-country-rates-per-100000-people**

## வேறு எதனையும் நான் அறியவேண்டுமா?

உங்கள் குழந்தை எப்போது BCG பெற்றுக் கொள்கிறார் என்றாலும் சரி, அவரது வழமையான நோய்த் தடுப்புகாப்புக்களை அவரது எட்டு வார பராயத்தில் வழங்க ஆரம்பிக்கலாம். உங்கள் குழந்தைக்கு BCG ஏற்றப்பட்ட அதே புஜத்தில், குறைந்தது மூன்று மாதங்களுக்கு வேறோர் ஊசிமருந்து ஏற்றப்படாதிருக்க நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இல்லையேல் அப்பகுதியில் உள்ள சுரப்பிகளில் வீக்கம் ஏற்படும்.

வழங்கப்படும் BCG தடுப்பூசி மருந்து உங்கள் பிள்ளையின் தனிப்பட்ட பிள்ளைகள் உடல்நலப் பதிவேட்டில் (சிவப்பு புத்தகம்) எதிர்காலக் குறிப்பு தேவைகளின் பொருட்டுப் பதிவு செய்யப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.



## மேலதிக தகவல்கள்

உங்களுக்குக் காசநோய், அல்லது BCG தடுப்பூசி அல்லது வேறு நோய்த் தடுப்புக்காப்புக்கள் எவை பற்றியும் மேலதிக தகவல்கள் தேவையானால், உங்கள் மருத்துவர், சுகாதார வருகையாளர், மருத்துவ மாது அல்லது தாதி உடன் பேசவும்; அல்லது பின்வரும் எங்கள் இணையத் தளத்தைப் பார்வை இடவும்: **www.nhs.uk/vaccinations**.

**நினைவில் கொள்க, காசநோய்ச் சிகிச்சைக்கு நீண்ட காலம் எடுக்கும், அதனைத் தடுப்பதோ மிக இலகுவானது.**

NHS

முடிக்குரிய பதிப்புரிமை பெற்றது 2019

2900193B 75K 1p பெப்ரவரி 2019 (APS)

இந்தத் துண்டுப்பிரசுரத்தின் மேலதிக பிரதிகளைக் கோர, நாடவும்: **www.orderline.dh.gov.uk** அல்லது கீழ்க்கண்ட தொலைபேசியில் அழைக்கவும்: 0300 123 1002, மினிகாம்: 0300 123 1003 (திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை. முற்பகல் 8 முதல் பிற்பகல் 6 வரை)